**Editor's Note**

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' UDUVIL, CHUNNAKAM.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 100125 / 81*

Established: 1841: A Christian Weekly : Published Every Friday

Vol. 141 JAFFNA, FRIDAY, 3RD APRIL, 1981 No. 14

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

*Subscription*

Inland: Rs. 35/- per year.

Single issues are available at the VARANY MISSION SALES CENTRE, Model Market, Jaffna at Re. 1/- per copy.

*Apply to:*

**The Manager,**

'Morning Star', Vaddukoddai.

OF SRI LANKA - JAFFNA RECEIVED 1981 4 9 PERIODICALS DIVISION LIBRARY

## A/L Examinations, 1981

Some one hundred thousand candidates will sit the *two* G.C.E. (Advance Level) Examinations which commence on April 20.

The Examination on the Old Syllabus ends on May 8 and the Examination on the Interim syllabus on May 9.

Nearly 50,000 are appearing for the Examination on the interim syllabus and 40,000 on the Old Syllabus.

Shortage of staff is a chronic problem in all schools preparing students for the A/L Examinatiods. In most schools, recent graduates from the Universities are empioyed on facilities fees.

Parents do not take 'chances'. They send their wards to the reputed 'tutories'. When a student gets good 'grades', the honour is shared by the school and the 'tutory' though the latter is more articulate about its achievements.

## District Development Councils

The DDCs will be chosen in Sri Lanka at an Election like the General Election to be held throughout the country on June 4th. The Election will be held on the 1979 Electoral Registers.

The number of members of a DDC would be always one less than the number of MPs for the district.

The first propaganda Rally of the UNP for the DDC elections was held at Mulkirigala (in Ruhuna). On that occasion, President Jeyawardene laid the foundation stone for a public market to be built at a cost of Rupees eight lakhs.

One of the speakers on this occasion was Mr. Steinar Skjaveland, Resident Representative of the Norwegian Agency for International Development (NORAD) who said that Norwegian aid was towards rural development in the country.

## Kingswood

*Kingswood College, Kandy* celebrates its 90th Anniversary this week. It was established on May 4, 1891 as the Kandy Boys High School by Mr. L. E. Blaze, with eleven students.

The Methodist Missionary Society took over the school in 1864. It was moved to Brownrigg street in 1899 and named Kingswood College. It was in 1925 that it was moved to its present site Randles Hill, donated to the school by Sir John Randlds.

Mr. P. H. Nonis was the first national Principal of the school. At the time of the government take-over, Mr. K. M. de Lanerolle, was Principal. The presnt Principal is an old Boy of Kingwood — Mr. Sisira Liyanage.

*Jaffna College*

## Alumni Seminar in Colombo

University teachers, members of professions and Principals of schools were among those who participated in a *Seminar* held recently in Colombo to elicit, opinion of the Alumni and friends of Jaffna College on the re-establishment of an institution for higher learning at Jaffna College.

The *guidliness* for the Seminar were the Prize Day Addresses made in recent years at Jaffna College by three eminent Professors, two of whom were from our own University — Prof. K. D. Arudpragasam and Prof. K. Indrapala.

The immediate need for an Institution of Higher Learning, according to *Prof. Arudpragasam* who was present at the Seminar, was that our traditional Universities of Sri Lanka can never expand to accommodate all qualified students [30,000 were eligible in 1979 and only 5000 were found places].

***Mr. Seelan Kadirgamar***, Senior Lecturer, University of Jaffna who chaired the meeting emphasised the point that the "Missionary motive" (characteristic of the days of Dr. Daniel Poor) should be rekindled to serve the community in and around Jaffna College.

The efforts made by President Jeyawardene for giving due prominence to the study of English in schools came in for special commendation.

At the same time it was also essential it was noted that bilingual Education should be given the stress it needs.

The period between the Advanced Level Examination and entry to Universities was not used by students at present to follow an intensive course in English.

The inadequacy of libraries maintained in schools and the quality of books found in the Public Library were not helpful to the students to acquire a taste for reading.

An important point raised at the Seminar was the sociological aspect of Higher Education. There was a time when missionaries sought to train women to equalise with men. Now women with large "dowries" play "a dominating role" in the intellectual climate of Jaffna.

The intellectual often barters his knowledge for a handsome dowry. The social pattern needs radical transformation.

The concensus was that Jaffna College today has a vital role to play in the field of higher learning in the country and that a return to the ideals of the Founders of the college to serve the needs of the community in the sphere of higher education should be foremost in the minds of all those on whom rests the responsibility of translating visions into realities.

## Jaffna Mourns Departed Tamil Leader

*Mr. Sivasubramaniam Kathiravelupillai* the T.U.L.F., M. P. for Kopay died in a Private Nursing Home in Madras on the afternoon of 31-3-81.

According to news reports, he was on his way to New Delhi to meet, by appointment on 2-4-81, Mrs. Indira Gandhi, the Prime Minister of India.

The body was flown on Wednesday (1-4-81) night to Katunayake Airport. Accompanying the body to Sri Lanka was the Secretary of *Eela Tamil Friendship Association, Madras*, Mr. A. S. Manavathamby. The body was received at the airport at Katunayake by Mr. M. Sivasithamparam M. P. for Nallur.

IN MADRAS

Before the plane left Madras on 1-4-81 for Katunayake, the Minister of Finance of Tamil Nad, Mr. Nedunchelian and the Speaker Mr. Rajaram called at the airport to pay their last respects to the departed Tamil Leader.

Among those who spoke at a meeting of condolence held at the airport in Madras were Messrs. Sathikapadsha and Kunnusamy of the D.M.C. Mr. Perumchithiranar chaired the meeting.

IN JAFFNA

On Thursday morning at about 7.30 a. m., the body arrived at the Palaly Airport Jaffna by an R.A.F. Plane. A large crowd had assembled at the airport from early dawn.

Among those at the airport besides family members of Mr. Kathiravelupillai and T.U.L.F. members were Mr. A. B. Wijekone, the District Minister of Jaffna. the Mayor of Jaffna, Mr. Raja Visuvanathan and other representatives from government departments, the Private Sector and religious heads.

The funeral rites were held at the residence of Mr. Kathiravelupillai at Chundiculi in the forenoon after which the body was taken in a decorated chariot to the Town Hall where it lay in state from 1.30 p. m. till 4 p. m.

The Prime Minister, Mr. R. Premadasa and Mrs. Premadasa, the Minister of Finance, Mr. Ronnie de Mel and Mrs. Mel, and Ministers Lalith Athulath Mudali and Thondaman arrived by special plane at 3.30 p. m. accompanied by nearly 30 members of Parliament to pay their last respects to the departed leader. Mr. Maithripala Senanayake and three others represented the Sri Lanka Freedom Party.

At the entrance to the Town Hall, they were received by the Hon. Mr. A. Amirthalingam, the Leader of the Opposition, Mr. Sivasithamparam and others and taken into the Town Hall where the body lay in state. The casket was draped with the T.U.L.F. flag — the rising sun.

OUR TRIBUTE

Mr. Kathiravelupillai's life and work and his commitment to the cause of Tamil Liberation were almost identical in character with the ideals that inspired his mentor — Mr. S. J. V. Chelvanayakam.

Loyalty to the *cause* of making the Tamil citizen an end not an instrument, was his only goal, despite the difficulties and obstacles that beset him and his party in the attainment of the goal. Any kind of compromise with such an objective was to him a gross betrayal of the trust the people had placed on them.

He was one of the vital human "hinges" that kept the party struggle turning on its original moral dimensions.

He practised in his life what his discipline taught him (He was an Honours graduate in Philosophy) that the ultimate end of Philosophy was not *to pity* the unhappy but be *of use* to them.

## New Admissions Jaffna College Technical Institute

New Sessions begin 20th May 1981. Classes for Technicians & Craftsmen. Applications close 20th April 1981. Application forms & other particulars are available at the Office.

Director,
Jaffna College Technical Institute,
Vaddukoddai."

## J. D. C. S. I. Treasurer's Office

The J. D. C. S. I. Treasurer's Office will be closed for Holy Week from 14th April to 20th April 1981, both days inclusive. Business commences only on 21st Aprii.

S. S. SELVADURAI,
Hony. Treasurer,
J. D. C. S. I.

*IN BRIEF*

O *83rd Birthday Commemoration — Thanthai Chelvanayakam's* 83rd Birthday will be commemorated in London tomorrow (4-4-81). Mr. Krishna Vaikunthavasan is expected to preside at the meeting.

In Jaffna, the commemmoration Festival was held on Tuesday (31-3-81) at 5 p. m. at *Kalyana Mandapam*, Nallur. Dr. S. A. Tharmalingam presided at the meeting.

At Tellippalai, Mr. Chelvanayakam's native place, there was a Prayer Meeting at the residence of Mr. E. V. Ponnudurai Mr. Chelvanayakam's brother, at which the members of the church participated. Rev. D. R. Ambalavanar, the Presbyter of the Tellippalai church conducted the service.

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

" நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம் "

மலர் 141 ] 3 — 4 — 1981 [ இதழ் 14


## அனைவர்க்கும் தேவையான அபாயப் படி

மக்கள் பலவகைப் பட்ட தொழில்களைப் புரிகிறார்கள். இவைகளிற் சில அபாயமானவை; அவைகளைப் புரிவோர்க்கு இடையூறு விளைவிக்கக் கூடியவை தொழில்களில் மேலதிகமானவை அபாயமற்றவையென நாம் சொல்வோமானால் சாதாரணமாக அதிற் தவறிருக்க முடியாது. யந்திர சாலைகள், நச்சுப் பொருட்கள் நிறைந்த இடங்கள் முதலியவற்றில் அபாயத்திற் கேதுவான தொழில்களைப் புரிபவர்க்கு ஒரு அபாயப் படி (Risk Allowance) வழங்குவார்கள். இந்தப் படி அபாயத்தை அற்றுப் போகப் பண்ணும் என்பதினாலல்ல ஒருவன் தன்னை அபாயத்திற் கேதுவான நிலைக்குள் கொண்டு செல்கிறான் என்பதினால் அவனுக்குக் கொடுக்கப்படும் ஒரு சன்மானமாகவே இது வழங்கப்படுகிறது.

பார்க்கப் போனால் வாழ்க்கை முழுவதுமே அபாயத்திற் கேதுவான ஒன்றாய்க் காண்கிறது அப்படியானால், நம்மனைவோர்க்குமே எங்கிருந்தோ ஒரு அபாயப் படி தேவைப்படவே செய்கிறது. யந்திரங்களும் நச்சுப் பொருட்களும் மாத்திரமே அபாயத்தை வருவிப்பனவல்ல. நாளாந்த வாழ்க்கையில் நாம் காணும் விபத்துக்கள் ஒரு பக்கம். இவற்றையும் விட, எத்தனையோ இடையூறுகள் நம்மை எதிர் நோக்கி வருகின்றன. அமெரிக்க ஜனாதிபதியை ஒருவர் சுட்டுக் கொல்லப் பார்த்தார். மூளைக் கோளாறு காரணமெனக் கூறுகிறார்கள். இப்பேர்ப்பட்ட கோளாறுடையோர் ஏராளமாக இருக்கின்றனரே! நீதி நியாயம் தம் வழியே செல்லவிடாது தடுப்பதற்குப் பிணைக் கைதிகளைப் பிடித்து வைத்து வாது செய்யும் வஞ்சகர்கள் எத்தனை பேர்? பதவி பெறப் பாத்திரமற்றவராய்ப் புறக்கணிக்கப்பட்டவர்கள் பலாத்காரமாய் அதைப் பற்றிக் கொள்ளச் செய்யும் முட்டாட் கிரியைகள் எத்தனை ஆயிரம்? வியர்வை சிந்திப் பாடுபட்டு ஒருவன் பணத்தைச் சேர்க்கிறான்; அடித்துப் பறித்து இன்னொருவன் அதைக் கொண்டோடுகிறான்; சில வேளைகளில் சுட்டுத் திருடவும் முற்படுகிறான். கொள்ளையடித்த பொருளைக் கொண்டு சுகபோக வாழ்க்கை நடத்தச் சதி செய்வோர் கூட்டங்கள் இப்படியே எத்தனை? இவ்வாரம் நம் நாட்டிலேயே நடந்தவற்றின் சிந்தனை இன்னமும் நம் மனதை விட்டகலவில்லையே!

கறுப்பரின் சின்னஞ்சிறு பாலகரைத் திருடிக் கொண்டுபோய்த் திருகிக் கொலை செய்யும் பாதகர்கள் சிலரைப் பற்றியும் பத்திரிகையில் வாசித்தோம். குரங்குக்கும் தன் குட்டி பொன் குட்டியென்பதை உணராத இப் பாவிகள் தம் பிள்ளைகட்கு இதுபோலச் சம்பவித்தால் துடியாய்த் துடியார்களோ? அப்படியாயின் ஏன் இந்த விபரீதச் செயல்கள்?

இப்பேர்ப்பட்டவைதான் நம்மெல்லாரையும் எதிர் நோக்கி நிற்கும் இடையூறுகள். இவைக்கு மாற்று மருந்தென்ன? கண்ணாடி வீடுகளில் வாசஞ் செய்வோர் கல் வீசக் கூடாது என ஆங்கிலத்தில் ஓர் முதுமொழியுண்டு. நாமெல்லாருமே கண்ணாடி வீடுகளிற்றான் வாழுகிறோம் நாமெறியும் கல் நம் வீட்டை உடைக்காது பிறர் வீட்டை நோக்கித்தான் செல்லுமாயின், பிறர் வீசுங் கல் நம் வீட்டை நோக்கி வருவதும் நியதியே. அப்படியானால் ஒவ்வொருவருக்கும் உரிய நட்ட ஈட்டை நாம் கொடுக்கவும் பெறவும் வேண்டியவர்கள் ஆவோம்.

மலைமேலிருந்து ஆண்டவர் அருளிய அறவியலில் உலகம் தன்னைக் கட்டியெழுப்ப வேண்டியதாயிருக்கிறது. "மனிதர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" எனப் புத்தி புகன்றார் அவர். அன்பைக் கொடுப்பவன் அன்பைப் பெறுவான்; இரக்கங் காட்டுபவன் இரக்கம் பெறுவான்; தயவுள்ளவன் தயவு பெறுவான். தன்னைப் பாதுகாக்கப் பட்டயத்தை உருவிப் பொருதுவோனை வெட்டப் போன சீடனை அவர் பார்த்து, "உன் பட்டயத்தைத் திரும்பவும் அதின் உறையிலே போடு" என்றார் ஏன்? பட்டயத்தை எடுப்பவன் பட்டயத்தால் மடிவான் என்பது நியதி. எவன் எதைத்தான் கற்றறிந்துகொண்டாலும் இதன் உண்மையை அவன் கண்டு கடைப்பிடிக்காது போகில் அவன் வாழ்க்கை அவனுக்கோ, பிறருக்கோ — எவருக்குமே பயன்படாமற் போகும்.

அன்பு, இரக்கம், தயவு — இவையே மனிதர் ஒருவருக்கொருவர் கொடுக்கவும் பெறவும் வேண்டிய அபாயப் படி என்போம். இவை அபாய வாழ்க்கைக்கான சன்மானமாயிராமல் அபாய நிலையை வாழ்க்கையினின்று அறவே ஒழிப்பவையாகும் உலகம் இதன் உண்மையை எப்போ கண்டறியுமென ஏங்கி நிற்க வேண்டியவர்களாகிறோம்.

---

செய்திகள்

### காவற் துறையினர் கடமையல்ல

சென்ற வாரம் பருத்தித் துறைக் கருகாமையில் நடந்த கொலையுடன் கூடிய கொள்ளையின் எதிரொலியாக அரசாங்கத்தின் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களினால் வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படும் பணங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் பணியிலிருந்து காவற் துறையினர் (பொலிஸ்) விலக்கப்பட்டுள்ளனர். பிரதானமாக இப்படிப் பெருந் தொகையான பணங்களைக் கிரமமாய்க் கொண்டு செல்லும் வங்கிகள் தமது சொந்தப் பாதுகாப்புச் சேவையை உண்டாக்கிக்கொள்ள வேண்டுமென ஜனாதிபதி அவர்கள் சென்ற ஜூன் மாதமே அறிவுறுத்தியுள்ளனர் எனச் சுட்டிக் காட்டப்படுகிறது. முத்து பண்டா, அபயரத்தின என்ற இரண்டு காவற்றுறை உத்தியோகத்தர் மேற்கூறிய கொள்ளையடித்தலின்போது, சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சினால் நடத்தப்பட்ட உயர் மட்ட ஆலோசனைக் கூட்டம் ஒன்றின் பின்னரே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தக் கொள்ளைச் சம்பவத்தை யடுத்து வடபிராந்தியத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரிப்பதற்காக ஏராளமான காவற்றுறை உத்தியோகத்தர் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

### காவற் துறையினர் தொகை குறைவு

யாழ்ப்பாணப் பகுதியில் பயங்கரவாதச் செயல்கள் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. பொதுமக்கள் மாத்திரமல்லாமல் காவற் துறை உத்தியோகத்தரே சுட்டுக் கொல்லப்படுகின்றனர். கொலையுடன் கொள்ளையும் இடம் பெறுகிறது. கொன்றவர் பிடிக்கப்படாமற் போவதும் கொள்ளை போனது கண்டுபிடிக்கப் படாமற் போவதும் யாழ். பிராந்தியத்திலிருக்கும் காவற் துறை உத்தியோகத்தர் தொகை போதாமல் இருப்பதாலேயே எனக் கூறப்படுகிறது. இரண்டு வருடங்களுக்கு முன் சுமார் 250 உத்தியோகத்தர் இருந்த இடத்தில் இன்று சுமார் 130 பேர் மாத்திரம் இருப்பதாகக் கூறப்படுகிறது.

### இந்திய சனத் தொகை இரட்டித்தது

சென்ற மாதம் முதலாம் திகதி நடந்த சனத் தொகைக் கணக்கெடுப்பைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட முதல் அறிக்கையின்படி இந்தியாவின் சனத் தொகை அறுபத்தெட்டுக் கோடி முப்பத் தெட்டு இலட்சத்துப் பதினாயிரத்து ஐம்பத்தொன்று (68,38,10,051). இது 1971ஆம் ஆண்டில் இருந்த சனத்தொகைக்கு (54,79,49,809) 24·75 வீதம் அதிகமானது, 34 ஆண்டுகட்கு முன், அதாவது 1947இல் இருந்த சனத் தொகைக்கு இன்றைய தொகை இரண்டு மடங்கானது.

இந்த ஆண்டின் கணக்கெடுப்பிலிருந்து பெறப்பட்ட பின்வரும் விவரங்கள் குறிப்பிடத்தக்கவை:

- மிகக் கூடுதலான சனத் தொகையுள்ள நகரம் கல்கத்தா. இதன் தொகை 91,65,650,
- அடுத்தபடியானது — புதிய பம்பாய் — தொகை 82,02,759
- டில்லியின் சனத் தொகை — 52,27,730.

  சென்னைப் பட்டணம் — 42,76,635.
- முழு நாட்டிற்குமான சனத் தொகையில் 1000 ஆண்களுக்கு 935 பெண்கள் வீதமே இருக்கிறார்கள். (ஆண்களிலும் பார்க்கப் பெண்கள் குறைவாயிருக்கும் பிற நாடுகள் பாகிஸ்தானும் வங்காள தேசமுமே).

கேரளப் பிரதேசத்தில் மாத்திரம் 1000 ஆண்களுக்கு 1034 பெண்கள் விதம் பெண்களின் தொகை அதிகமாய்க் காண்கின்றது.

எழுத வாசிக்கத் தெரிந்தோரின் விகிதம் இன்றைய கணக்கெடுப்பின்படி மிகக் குறைந்தாய்க் காணப்படுகிறது — 36·17 சத விதம். 1961ஆம் ஆண்டில் இது 24 வீதமெனக் கணக்கிடப்பட்டது.

1971ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி இந்தியாவின் முழுத் தொகையிலும் கிறிஸ்தவர் விகிதம் 2·6 (தொகை 1,42,23,382,). பிரதேசங்களிற் கிறிஸ்தவர்களின் வீதம் பின்வருமாறு (1971இல்) காணப்பட்டது:-

நாகலாந்து — 66·76; மேகலயா — 46·98; மணிப்பூர் — 26·03; கேரளப் பிரதேசம் — 21·05; தமிழ் நாடு — 5·75; அசாம் (மிசோராம்) — 4·46; ஆந்திரப் பிரதேசம் — 4·19.

---

### வேதாகம அறிவுப் போட்டி

இவ்வாண்டு ஆதீனத்தின் சமயக் கல்விக் குழுவினால் நடத்தப் படவிருக்கும் வேதாகம அறிவுப் போட்டிக்குப் பின்வரும் பகுதிகள் கொடுக்கப்பட்டுள்ளன:-

மேற்பிரிவு (31-12-62 க்குப் பின் பிறந்தோர்)

(1) பாடப் பகுதி —

எரேமியா — அதி. 1 — 20.
1ஆம் 2ஆம் இராஜாக்கள்.
லூக்கா சுவிசேஷம்.
ரோமர் அதி. 1 — 16.

(2) மனனப் பகுதி —

சங்கீதம் 37 : 4 — 8; 51:1 — 17.
நீதி மொழி 3 : 5, 6, 11, 12.
ஏசாயா 55 : 6 — 9.
லூக்கா 9 : 23 — 25.
யோவான் 15 : 1 — 15.
ரோமர் 8 : 31 — 39.
கலாத்தியர் 5 : 22 — 23.
வெளி 3 : 20.
நைசியா விசுவாசப் பிரமாணம்.

(3) பொதுவான வேதாகம அறிவு

கீழ்ப் பிரிவு (31-12-66க்குப் பின் பிறந்தோர்)

(1) பாடப் பகுதி —

ஆதியாகமம்.
யாத்திராகமம் — அதி. 1 — 6.
மத்தேயு சுவிசேஷம்.

(2) மனனப் பகுதி —

உபாகமம் 32 : 1 — 4.
சங்கீதம் 46; 84.
ஏசாயா 35 : 3 — 7.
மாற்கு 8 : 34 — 38.
2-ம் தீமோத்தேயு 3 : 14 — 17.
அப்போஸ்தல விசுவாசப் பிரமாணம்.

(3) பொதுவான வேதாகம அறிவு

இரண்டு பிரிவுகளிலும் பாடப் பகுதிக்கு 40 புள்ளிகளும், மனனப் பகுதிக்கு 30 புள்ளிகளும், பொதுவான வேதாகம அறிவுக்கு 30 புள்ளிகளும் வழங்கப்படும்.

இந்தப் போட்டியை விட ஆதீனச் சபைகளின் பிள்ளைகளுக்கான இன்னுமொரு பரிசுப் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மலைப் பிரசங்கத்தை (மத்தேயு 5 — 7) மனனம் செய்து பிழையின்றி ஒப்புவிக்கும் 18 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு முப்பது ரூபாய்ப் பரிசுகள் வழங்கப் படவுள்ளன. இந்தப் போட்டி ஜூலை 11ஆம் திகதியன்று நடைபெறவுள்ளது. இதற்கான விவரங்கள் சபைகளுக்கு ஏற்கெனவே அனுப்பப்பட்டுள்ளன.

# கடவுள் இராச்சியம் வருவதற்கான துணிபு

[ தே. இ. திருச்சபை யாழ் ஆதீனத்தின் 34ஆம் வருடாந்தக் கூட்டத்தில் கலாநிதி கனம் விக்ரர் பிரேமசாகர் அவர்கள் நடத்திய இரண்டாம் வேதப்படிப்பின் சாராம்சம். ]

வேதப் பகுதி — பரி. லூக்கா 1 : 46 — 55. மரியாளின் கீதம்

மரியாளின் கீதம் என நாம் கிரமமாய் உபயோகித்து வரும் இப் பாடலை மரியாள் பாடிய காலத்தில் அவள் இருந்த இக்கட்டான நிலை அளவிடற்கரியது. சமூகத்திடமிருந்து வரக் கூடிய நிந்தையும் அவதூற்று மொழிகளும், தனக்குப் புருஷனாய் நியமிக்கப்பட்டவர் தன்னைக் கை விட்டுப் போகும் பயம் — இவை யாவற்றின் மத்தியிலும் "இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை; உமது வார்த்தையின்படி எனக்கு ஆகக் கடவது" எனத் தன்னைத் தானே அர்ப்பணிக்கும் ஒரு துணிகரமான தீர்மானத்தை அவள் செய்திருந்தாள். மேசியாவைப் பெற்றெடுக்கும் வாய்ப்பை அநேகம் பெண்கள் எதிர்பார்த்திருக்கக் கூடும். அது மரியாளுக்குக் கொடுக்கப்பட்டபோதோ மிகவும் கடினமான ஒரு நிபந்தனையை அவள் ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. தன் ஜனத்தின் மீட்பின் நிமித்தமாக — அதற்குக் கடவுள் ஆற்ற வேண்டிய செயலுக்காக — அவள் தன்னைத்தானே அர்ப்பணித்தாள்.

இப்பேர்ப்பட்ட ஒரு இக்கட்டான நிலையே அவளுக்குப் புருஷனாய் நியமிக்கப்பட்டிருந்த யோசேப்புக்கும் ஏற்பட்டிருக்கும். அவளையும் வரும் நிந்தையையும் ஏற்றுக் கொள்வதா? அல்லது தள்ளி விடுவதா? அவன் எடுத்துக் கொண்டதும் ஒரு துணிகரமான தீர்மானம் — ஒரு வீரச் செயலென்றே நாம் கூற வேண்டும். கடவுள் ஆட்சியைக் குறித்து இவர்கள் கொண்டிருந்த தீர்க்கமான காத்திருப்பே இத்தகைய அர்ப்பணிப்பைச் செய்ய அவர்களை நடத்தியது எனக் காண்கிறோம்.

மரியாளின் கீதத்தில் மூன்று திட்டமான காத்திருப்புக்களை நாம் காண்கிறோம்.

1. சமுதாய நீதி — வாக்கியம் 51.

2. அரசியல் முறையில் புரட்சி வாக்கியம் 52.

3. பொருளாதாரச் சீரமைப்பு வாக்கியம் 53.

கடவுளுடைய இராச்சியத்தின் வருகை சம்பந்தமாக இப்பேர்ப்பட்ட காத்திருப்புக்களைக் கொண்டிருக்க வேண்டிய திருச்சபை அவை நிறைவேற்றப்படுவதற்காகத் தன்னைத் தானே அர்ப்பணிக்க வேண்டியதாயிருக்கின்றது.

இராச்சியத்தின் வருகை ஒரு பாலகனின் பிறப்போடு சம்பந்தப்படுத்தப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பாலகனாகிய மோசேயின் பிறப்பும் பாதுகாப்பும், வாலிபப் பராயத்தில் அவன் கொண்டிருந்த நோக்கங்கள், பார்வோனின் அரண்மனையில் அவனுக்கு அளிக்கப்பட்டிருந்த பல்வேறு பயிற்சிகள், இஸ்ரவேல் ஜனத்தை அழைத்துச் செல்லும்படி அவனுக்கு இடப்பட்ட கட்டளை — இவை யாவுமே இஸ்ரவேலின் மீட்பிற்கான படிகளாய் அமைந்தது போல, இந்த இயேசு பாலகனின் பிறப்பும் வாழ்க்கையும் தேவ இராச்சியத்தின் வருகைக்கு ஆதாரமாயின. இராச்சியத்தின் வருகைக்காக வேண்டுவதும் அதற்காகத் தன்னைத் தானே அர்ப்பணிப்பதுமான திருச்சபை தன் வசம் ஒப்புவிக்கப்பட்ட பாலகரைப் பராமரித்துப் பயிற்றுவிக்கும் முயற்சியில் இந்த ஏற்பாட்டை மனதிற் கொண்டிருக்க வேண்டியதவசியம். அதற்கேற்க அவர்களைப் பயிற்றுவிப்பது அதன் மேல் விழுந்த கடமை.

மரியாளின் காத்திருப்புக்கள் கல்வாரியில் நடந்த சிலுவைச் சம்பவத்தினால் அவமாக்கப்பட்டனவா? அப்படியாகவே நிலைபரங்கள் தோற்றியிருப்பினும், இயேசுவோடு கூடித் திரிந்த சில வாலிபர் மேல் வீட்டறையில் தரித்திருந்து ஏதோவொன்று சம்பவிக்கக் காத்திருந்தார்கள் எனக் காண்கிறோம். மரியாளும் அவர்களுடனே கூடியிருக்கக் காண்கிறோம். நம்பிக்கையைக் கைவிடாத கூட்டமாய், கொடுக்கப்பட்ட வாக்குறுதி நிறைவேறக் காத்திருந்தார்கள்; அவர்களுடைய அர்ப்பணிப்பின் உறுதியை அங்கே காண்கிறோம். அப்பேர்ப்பட்ட உன்னத நோக்கங்களைக் கொண்டிருந்து அவற்றிற்காய்ச் செயல்படத் தன் வாலிபரைத் தூண்டி எழுப்பி விடுவதும், பயிற்றி எடுப்பதும் கூடத் திருச்சபைக்குக் கொடுக்கப்பட்ட உத்தரவாதமாகும். நிலைபரங்கள் எத்தனை பிரதிகூலமாய்த் தோன்றினும் கிரியை செய்பவர் கடவுளே யென்றும் அதற்கு நம் அர்ப்பணிப்பு அவசியமென்றும் நம் வாலிபர் காண வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

---

## கௌரவப் பட்டம் பெற்றனர்

சென்ற மார்ச் 19ஆம் திகதியன்று பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட பட்டமளிப்பு விழாவில் கௌரவ கலாநிதிப் பட்டம் பெற்ற நால்வரில் ஒருவர் காலஞ்சென்ற றொபேர்ட் ஹேராய்கிமரன் போல் ஆவர். யாழ்ப்பாணச் சபாசங்கச் சபைகளிற் குருவாய்ப் பலவாண்டுகள் டமையாற்றிக் காலஞ் சென்ற கனம் ஐசக் போல், திருமதி போல் ஆகியோரின் கனிஷ்ட புதல்வனே இவர் தமது 74ஆம் வயதில் 1978, ஜூலை மாதம் காலமாயினர். மறைவின் பின்னை பட்டமளிப்பு இவருக்கு வழங்கப்பட்டது.

கொழும்புச் சர்வகலாசாலைக் கல்லூரியிற் படித்து விஞ்ஞானத் துறையில் மிக்க தேர்ச்சி பெற்ற இவர், அரசாங்கத்தின் புலமைப் பரிசில் பெற்றுக் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையைச் சேர்ந்தனர். அங்கே இயந்திர நுட்பவியல் முதலிலைச் சிறப்புத் தேர்வில் முதலாந்தரச் சித்தியெய்தினர். இப்பேர்ப்பட்ட சித்தியை முதல் முதலாகப் பெற்ற இலங்கையர் இவர்களே. திரும்பி இலங்கைக்கு வந்து, இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் ஆசிரியப் பதவியேற்றுச் சிறந்த முறையிற் கடமையாற்றினர். அக்கல்லூரியில் ஒரு மின் துறைப் பொறியியற் பிரிவை ஸ்தாபித்த பெருமை இவரையே சாரும். 1950ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பொறியியற் பகுதி ஆரம்பிக்கப்பட்டபோது திரு. போல் அவர்கள் மின் துறைப் பொறியியற் பிரிவின் பீடத் தலைவராக நியமிக்கப்பட்டனர். சுமார் நாற்பது ஆண்டுக் காலமாக ஏராளமான மின் துறைப் பொறியியலாளர் இவர் கைக்கூடாகவே பயின்று வந்தனர். இலங்கையில் இத்துறையின் பிதாவாக இவர் கணிக்கப்படுவதற்கு நியாயமுண்டு எனவே சொல்ல வேண்டும்.

பல்கலைக்கழக வேந்தரிடம் பட்டமளிப்பதற்காக இவர்கள் பெயரை முன்வைத்த பேராசிரியர் W. P. ஜெயசேகரா, திரு. போல் அவர்களின் மகத்தான சேவையை விரித்துரைத்து, அவர்கள் தமது வேலைக்குத் தம்மை முழுவதுமாய் அர்ப்பணித்த ஒருவர் என அறிமுகப்படுத்தினார்கள்.

— நிருபர்.

---

# தமிழ் நாட்டில் புதிய ஊழிய முறை ஆய்வு

சென்னைப் பட்டணத்திலுள்ள குருக்குல இறையியற் கழகம் தமிழ் நாட்டில் ஞானஸ்நானம் பெறாத விசுவாசிகளைப் பற்றிய முக்கட்ட ஆய்வொன்றை ஆரம்பித்துள்ளது. முதற் கட்டத்தில் 247 சபைகளுக்கு இந்த ஆய்வுக்குரிய புள்ளி விவரப் பத்திரங்கள் அனுப்பப்பட்டன. இவற்றுள் 47 திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன. ஏழு சபைகளில் ஞானஸ்நானம் பெறாத விசுவாசிகள் இல்லையெனக் கூறப்பட்டது மற்ற 40 சபைகளிலுமிருந்து பெறப்பட்ட புள்ளி விவரங்களை ஆதாரமாகக் கொண்டு இந்த ஆய்வு நடத்தப்படுகிறது.

குருக்குல இறையியற் கழகத்தைச் சேர்ந்த கனம் ஹெர்பேற் ஹூபர் அவர்களின் தலைமையில் நடைபெறும் இந்த ஆய்வின் இரண்டாம் கட்டம் விடையளித்த சபைகளின் குருமார் குறிப்பிட்ட சில பணியாளரைக் கொண்டு ஞானஸ்நானம் பெறாத (ஞா. பெ.) விசுவாசிகளுடன் ஒரு நேர்முகச் சந்திப்பை நடாத்துவதாகும். இவைகளாற் பெறப்படும் விவரங்களை ஆதாரமாகக் கொண்டு இப்பேர்ப்பட்ட ஞா. பெ. விசுவாசிகளுக்கான ஒரு புதிய ஊழிய முறையை மேற்படி இறையியற் கழகம் சபைகளின் ஆலோசனைக்குக் கொண்டு வரும். இது மூன்றும் கட்டமாகும். ஞா. பெ. விசுவாசிகளின் ஆத்மீக வளர்ச்சிக்கு உதவியான வகுப்புக்கள் முதலியன இப்புதிய ஊழிய முறையில் அடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முதற் கட்டத்திற் பெறப்பட்ட விவரங்களை ஆதாரமாகக் கொண்ட சில குறிப்புக்களை சண்டுத் தருகிறோம்.

- குறிக்கப்பட்ட 40 சபைகளிலும் ஞா. பெ. விசுவாசிகள் தொகை 261, எனவே சபைக்குச் சராசரி 6.5.
- வயதுப் பிரிவின்படி கூடிய தொகையினோர் 40 — 49 வயதுக்கிடையிலானோர் — தொகை 58; வீதம் : 23. அடுத்த படியினோர் வயதுப் பிரிவு : 30 — 39 வயது. தொகை : 46; வீதம் : 18; மூன்றும் படியான வயதுப் பிரிவு : 25 — 29 வயது; தொகை : 31; வீதம் 12.
- எனவே முழுத்தொகையிலும் அரைப் பங்கானோர் குடும்பங்களின் பெற்றோராயிருக்கும்.
- ஆண்கள் 65% பெண்கள் 35%.
- இவர்களில் 14 பேர் 15 வருடத்துக்கு மேலாகவும், 29 பேர் 10 தொடக்கம் 15 வருடம் வரையும் ஞா. பெ விசுவாசிகளாய் இருந்திருக்கின்றனர்.
- ஆண்கள் மூன்றில் இரண்டு பங்கானவர்கள். சமுதாய ரீதியாகவும் சட்டப்பிரகாரமாகவும் ஆண்கள் குடும்பத்தின் பொறுப்பாளராகக் கணிக்கப்படுவதன் நிமித்தம், பெண்களிலும் பார்க்க ஆண்கள் ஞானஸ்நானம் பெறுவது கடினமான காரியமாகும். மனைவி ஞானஸ்நானம் பெற்றாலும் கணவன் ஞா. பெ விசுவாசியாய் மாத்திரம் இருப்பது புத்தியாய்த் தோற்றக் கூடும்;
- ஞா. பெ விசுவாசிகளில் உயர்குல இந்துக்கள் 45 வீதத்திற்குச் சமமான 117 பேர், முஸ்லிம்கள் இருவர்; தாழ்த்தப்பட்ட சாதியினர் 73 (29%); பின்தங்கிய வகுப்பினர் 68 (26%).

  வேறெந்தக் காரணத்திலும் பார்க்கச் சாதிக் கட்டுப்பாடே ஞானஸ்நானத்திற்குப் பிரதான தடையெனக் காண்கிறது.
- ஞானஸ்நானத்திற்குத் தடையெனக் குறிக்கப்பட்ட பிற காரணங்கள் : விவாகச் சம்பந்தங்கள்; மரண வீட்டு ஆசாரங்களைக் கவனிக்க வேண்டிய கட்டுப்பாடு; சமுதாயத்தில் ஸ்திதி இழக்கும் பயம்; பெற்றோரின் அனுமதியின்மை; உயர் குலத்த இனத்தவரை விட்டுப் பிரிய வேண்டிய நிர்ப்பந்தம்.
- அரசாங்கத்திடமிருந்து வரும் சலுகைகளையோ, குடும்பச் சொத்துக்களையோ இழந்து விடக் கூடுமென்ற பயம்; சபையிற் காணப்படும் சாதி வித்தியாச மனப்பான்மை; சபையின் வழிபாட்டு முறைகள், அமைப்பு அல்லது நிர்வாக முறைகளைக் குறித்த போதிய அறிவின்மை — இவை வேறு காரணங்களாய்க் குறிக்கப்பட்டன.

இவர்கள் மத்தியில் ஒழுங்குபண்ணப்பட்ட எந்த ஊழிய முறையும் கையாளப்படக் கூடாதெனவும், ஆவியானவர் தம் இஷ்டப்படியே கிரியை செய்ய விடுவதினால் அடுத்த தலைமுறையினோர் கூடிய தைரியத்துடன் முன்வருவார்கள் எனக் காத்திருக்கலாமெனவும் ஐந்து குருமார் ஆலோசனை கூறினர். மற்றப் பக்கமாகப் பதினொரு குருமார் இவர்கள் மத்தியில் தனியாள் ஊழியம் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும், குருமாரும், உபதேசிகரும், வேதாகம ஸ்திரீகளும் கிரமமாக இவர்களைச் சந்தித்து, தமது ஆத்ம வளர்ச்சியைக் குறித்துக் கூடிய கரிசனை எடுக்க இவர்களுக்கு உதவி புரிய வேண்டுமெனவும் ஆலோசனை கூறினார்கள். இவர்களுக்கு உதவியான துண்டுப் பிரசுரங்களும் கடித மூலமான கற்பித்தலும் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும், இவர்களின் பொருளாதாரக் கஷ்டங்களை நீக்கச் சபை ஏற்ற நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமெனவும் வேறு ஆலோசனைகள் கூறப்பட்டுள்ளன.

[ ஆதாரம்: தென்னிந்திய திருச்சபைச் சஞ்சிகை 2/81. தொகுப்பு : பத்திராதிபர் ]

*EDITORIAL*

## Energy, Development and Social Justice

In India last September, hundreds of people in the state of Orissa died of a major flood. To the world, it was just another sad news of nature's periodic ravages.

But the *real* cause of the floods, as we are able to learn from authoritative sources, is disturbing. To generate electricity and keep the giant wheels of industry moving and the industrial magnates " fattening ", the authorities have to keep the water levels high for power generation.

When heavy rain descend, the dams have to be opened suddenly with disastrous results. Quickly the news grabs the headlines " Floods make thousands homeless in Orissa ". Floods make news but not the reasons for them.

It is a little known fact that what is crippling Third World economics today is *not* so much rising oil prices or devastations of nature but *injustice and insensitivity* operating within the countries.

Bruce Best, a journalist writing on the current " wood and fuel crisis" [wood remains the single most popular energy in the World today]. says that while working in a distant outpost in Australia, he discovered that his secretariat was built really in the midst of what once was a little forest.

He and his staff were using *reems of paper* which were made out of the wood cut down from that little forest and marketed to them as finished products by a multi-national corporation.

They little realised that when they were using that paper, they were really " consuming " fuel that belonged to the poor. They assumed that the one and a half billion people in the World today — the poor — could go on cooking their single meal for the day with gas and electricity. (Thailand's woods are today converted into paper for International markets ).

Here lies the crux of the whole problem of development in Third World countries. Injustice, insensitivity and easy assumptions on the tough issues that confront the poor, obscure the vision and blind developed countries to the realities of Third World poverty.

Former US Secretary, Henry Kissinger put the idea in terse language " we cannot be in isolation from nine tenths of humanity ".

The 16th of October, 1981 has been designated *World Food Day.* It is in this context that we have today to view our 'energy crisis', caused by a profligate use of our natural resources and our " development crisis ", caused by fabulous investments on centralised energy sources without the opportunity or ' political will ' to ensure that the benefits of *development* trickle down to the poor.

In the Philipines, a huge hydro - electric dam has displaced, we read, 34,000 subsistance farmers. Teak from Malaysia is ending up as furniture in Western stores.

" Unless the poor get their landlords off their backs " reports Janos Paszter, Co-ordinator far the WCC Programme, *Energy and my neighbour* "it is almost meaningless to talk about the energy crisis."

Here in Sri Lank, the problem of 'development' is in the main the problem of bridging the insufferable gap between vision and reality.

No one can doubt the governments' good intentions regarding development. The prospect of the Victoria, Ulpitiyawa and Lunugamvehere reservoirs irrigating one million acres of our paddy land in both *Yala* and *Maha* (our harvesting seasons) may not be only in the realm of vision. It may be a reality after a long gestation period.

But the prospect cannot be a substitute for a scheme of helping our peasants realistically to solve their problem of fuel for their hearth and power for their water pump to keep their body and soul togther, *now.* We have to climb down our " ivory towers " and have a good look at the suffering in the plains.

Very little purpose would be served by giving credit loans to farmers to organise their own development efforts.

A similar experiment was made in India when the government gave each farmer $ 500 (Rs. 4000) to instal a bio gas plant for their fuel and lighting needs.

What happened was not a surprise. The farmers in many instances used the money for what they thought was a priority — to marry off their daughters.

One imortant fact it is good for us to bear in mind. Eighty-five per cent of the three to four million projected increase in population in the next two decades will occur, according to futurologists in countries that are poor and least developed.

It is this category which an economist has designated aptly as " the ecological refugees " in the growing slums of the Third World who will constitute a veritable tinder box in the twentyfirst century.

Unless we set in motion a constructive and realistic programme of development with an integrated approach at grass root level the prognosis of the economist will not be just overblown rhetoric.

## Passion Sunday (5-4-81)

The fifth Sunday in Lent or the second Sunday before Easter is widely known as *Passion Sunday* because on this day our Lord began to make open predictions of his coming sufferings.. From now to Good Friday the cross becomes central in the Church's teaching. The Epistle to the Hebrews, from which the Liturgical Epistle for this day is taken, has been called the Epistle of Priesthood and, as you know, it is the characteristic and distinctive function of a priest to offer sacrifice, and to bless, The author of the Epistle uses the sacrificial system of the Old Testament to illustrate and explain the meaning of sacrifice of the death of Christ, and meaning of His heavenly and eternal priesthood. The analogy is, in fact, a contrast: for it is of the essence of the argument that, by comparison with the High Priesthood of the son of God, the Levitical priesthood was a dead end.

The author of Hebrews is here contrasting the old, agreement (the Law) and the new agreement (Christianity, the Gospel). Under the old there was a tent or tabernacle, which was the dwelling-place of God, and in which the High Priest offered sacrifices as the Law required. But now, under the new agreement, Christ himself is the High Priest; he enters "a grater and more perfect tent which no human hand has made", the inner sanctuary which is God's presence. Instead of offering in sacrcfice the blood of animals, he offers his own.

Further, if under the old agreement the blood of animals had value, what of the blood of Christ, the spotless victim, whose sacrifice was his own free act? This blood has power to cleanse "all who obey God's call", so making possible a living service to a living God.

Jesus Christ, alone of all men perfect in character and life, was able to offer to God a life perfectly devoted and consecrated to God's will. He was able to do this because he was completely in union with God and therefore stronger than evil. Because he was fully human, he could act as our representative — in our name, and God could accept his perfect life as a token of our full repudiation of sin and consecration to good. He is the one perfect sacrifice for all mankind. He is the perfect Victim, perfect Priest. He has borne our human nature up into the very presence of God, like the High Priest entering the Holy of Holies; He has fulfilled the very purpose o all sacrifice — union with God; and God in His infinite mercy raises us up together with Him, and makes us to sit with Him in the heavenly places, in Jesus Christ our Lord. " To him who is victorious, I will grant a place on my throne, as I myself was victorious and sat down with my Father on his throne " (Rev. 3:21), "The conclusion of the matter is this: there is no condemnation for those who are united with Christ Jesus, because in Christ Jesus the life-giving law of the spirit has set you free from the law of sin and death " (Rom. 8:1), Blessed be God.

"The royal banners forward go
The Cross shines forth in mystic glow;
Where he in flesh, our flesh who made,
Our sentence bore, our ransom paid.
(Venantius Fortunatus.)

*V. S. D. S.*

*IN BRIEF*

O *The Christa Seva Ashram*: Sevak Rev. S. Selvaratnam was remembered on the Eighth Anniversary of his Home Call on Saturday 28-3-81 at Christa Seva Ashram, Chunnakam. A Holy Communion Service was held at 7.30 a. m. at the Ashram Chapel. Sevak Rev. Sam Alfred conducted the Service. Rev. D. R. Ambalavanar preached the sermon.

A large number of friends of Periannan was present at the Service and later participated in the oriental fellowship breakfast. —*Kanji.*

O *The J.D.C.S.I. Youth Camp* is scheduled to be held from April 21 — 25 at the Camp House, Casuarina Beach, Karainagar.

O *The Fort Church Service* in Jaffna organised by the Jaffna Christian Union will be held on April 26th at 4.30 p.m.

O *Vigilance Society.* Mr. R. Sundaralingam Deputy Inspcetor General of Police has told the Vigilance Society at Kollupitiya that there are over 1000 pick pockets between the ages of 5 and 65 operating in the city of Colombo. Fifty percent of them were women.

O *Early Retirement* — There is a proposal before the government to allow all public officers who are in the non-technical service to retire after 20 years of service of at the age of 45

The Federation of the UNP Trade Unions has forwarded this scheme. If approved, some 5000 public servants may retire from service.

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB./100125/81*

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philip Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 3rd April, 1981.